www.tamilarangam.net

# முன்னணிச் செய்தி

இதழ் 1

செப்ரெம்பர் - 4

---

செப்ரெம்பர் 1984 | செய்தி -1- | பக்கங்கள் -8-

---

அவலமும் கொடுமையும் நிறைந்த இந்த நாட்களில், முக்கியமான செய்திகளை உங்களுக்குத் தருவதும் அவை பற்றிய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதும் அவசியமானதாகிறது.

பொதுவான தொடர்புசாதனங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் ஊதுகுழலாகத் தொழிற்படுகின்றன. அன்றேல், மிகவும் பலமாகத் தணிக்கை செய்யப்படுகின்றன. Daily news, தினகரன் போன்ற பத்திரிகைகள் இனவெறி சிறீலங்கா அரசின் வர்த்தமானிகள். Sun, தினபதி போன்றன பச்சையாகவே சிறீலங்கா அரசிற்காகப் பொய்ப் பிரசாரம் செய்பவை. உபாலியின் The Island உண்மை பேசுபவனை வேடம்போட முயன்றாலும் எமது போராட்ட விஷயத்தில் அரசைச் சார்ந்து நிற்பதாகும். வானொலியைப் பற்றி நாங்கள் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும்?

இச் சூழலில் எம்மால் இயன்றவரை சரியான தகவல்களையும், செய்திகளையும் சேகரிப்பதும், பரப்புவதும் முக்கியமானது. எமது பிரதேசங்களிலேயே உண்மையான செய்திகள் தெரியாமல் வதந்திகளும் பொய்களும் கூடப் பரவுகின்றன. யாழ்ப்பாணத்தில் நடப்பவை பற்றி மட்டக்களப்பில் தெரியாது. ஒரு நெருக்கடி நிலையில் பத்திரிகைகள், வானொலி ஒன்றும் இல்லாத நிலை ஒன்றைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். எப்படி இருக்கும்? ஒவ்வொரு விடுதலை அமைப்பும் தனக்கென்று செய்தி, பொதுசனத் தொடர்பு வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் செய்தி ஏடாக 'முன்னணிச் செய்தி' மாதம் மாதம் வெளிவரும்.

தோழர்கள் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டிய முக்கிய விஷயங்கள் இரண்டாகும். ஒன்று, இம்மடலை ஏனையோருக்கும் வாசிப்பதற்காகக் கொடுப்பது. இரண்டு, உங்களுடைய பிரதேசங்களில் கிடைக்கும் விடுதலைப் போராட்டம் சம்பந்தமான செய்திகளையும், தகவல்களையும், அரசு அடக்குமுறை குறித்த விவரங்களையும் கூடவே இம்மடல் குறித்த விமர்சனங்களையும் எழுத்து வடிவில் எம்மிடம் தருவது.

மிகுந்த ஆர்வத்துடன் உங்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊர்காவற்றுறை, 13.07.1984, அதிகாலை.

3.45 மணியிலிருந்து குண்டுவெடிச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன. எமது சக இயக்கம் ஒன்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியது. ஆனால் சரியான முறையில் பிரதேசப் பின்னணியைப் விளங்கிக் கொள்ளாததாலும், தாக்குதல் முயற்சி பற்றி ஏற்கனவே பொலிஸ் படை எச்சரிக்கையாக இருந்ததாலும் முயற்சி தோல்வியில் முடிந்தது. பொலிஸ் தரப்பில் எவருக்கும் சேதம் இல்லை. நிலையக் கட்டிடம்கூட சிறிதளவு சேதத்துடன் தப்பிக்கொண்டது. ஆனால் வீதியைக் கடந்து செல்ல முயன்ற ஒரு தேங்காய் வியாபாரி (70 வயது) சுடப்பட்டு மரணமானார். தாக்குதலில் பின்வாங்கிய சில கெரில்லாக்கள் மக்களின் உதவியுடன் தப்பிச்சென்றனர். இதேநேரம் 'தபால் நிலையம், வங்கிகள் ஊர்காவற்றுறையில் கொள்ளையடிக்கப்பட்டன' எனும் ஸ்ரீலங்கா அரசின் அறிக்கை அப்பட்டமான பொய்யாகும்.

## புதிய இயக்கங்கள்?

சித்தன்கேணி, பண்டத்தரிப்புப் பகுதிகளில் வர்த்தகர்களுக்கு எனும் தலைப்பில் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அவற்றில் "இந்தக் காலகட்டத்தில்' பொருட்களைப் பதுக்கவோ அல்லது விலையை அதிகரிக்கவோ அல்லது பொருட்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியினரை மட்டும் சென்றடையவோ வகை செய்யும் வர்த்தகர்களுக்கு" விடுக்கப்பட்டுள்ளது. கீழே ஜனநலன் பாதுகாப்புப் பிரிவு என எழுதப்பட்டுள்ளது.

இதுபோலவே இளவாலைச் சந்தியில் மிகச் சிறிய சுவரொட்டிகள் ஒன்றில் வடிசாராயம் விற்பவர்களுக்கும், உற்பத்தி செய்பவர்களுக்கும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஈழமக்கள் அதிரடி எனும் விநோதமான பெயர்கொண்ட குழுவால் விடுக்கப்பட்டுள்ளது. இச் சுவரொட்டியை அவதானித்தவர்களுள் அநேகர் தம்முள் நகைத்துக்கொண்டு சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

29.06.1984 அன்று வடமராட்சிப் பகுதிகளில் உள்ள உயர் பாடசாலைகளில் E.L.O. எனும் பெயரில் ரோணியோ செய்த துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. பிரசுரத்தின் சாராம்சம்:

> 'இன்று பல யுவதிகளும் இளைஞர்களும் பயிற்சிக்குத் தயாராக இருக்கின்றனர். அவர்களுக்கு பயிற்சி அளிக்க இயக்கங்கள் முன்வராமையால் நாங்கள் முன் வருகின்றோம்; பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. எம்முடன் ஏனைய இயக்கங்களும் ஒன்று சேர்ந்து போராட வருமாறு அழைக்கின்றோம் '

புதிய இயக்கங்கள் தோன்றுவதை ஒருவரும் தடுக்க இயலாது. ஆனால் சில விடயங்களை நாம் அவதானிக்க வேண்டும். இருந்து வரும் இயக்கங்களில் இருந்து கருத்து வேறுபாடுகள் காரணமாக அல்லது 'தீவிரம் போதாது' காரணமாக பிரிந்துசெல்பவர்கள் தனியே இயக்கம் தோற்றுவிக்கிறார்கள். இவர்கள் அனைவருமே மக்கள் அங்கீகாரத்தையும், பிரபல்யத்தையும் பெறும் வழியாக ஒரே வாய்ப்பாட்டைக் கையாள முயல்கிறார்கள். சில கொள்ளைகள், சில தாக்குதல்கள், சிலவேளைகளில் 'மரண தண்டனைகள்' - பின்னர் பிரசுரம் மூலமாக உரிமைகோருதல். இவ்வகையான அனைத்துக் குழுவினரும் தமிழ்ப் பிரதேசங்களில் மக்களிடம் அமைப்புரீதியாக வேலைகளில் ஈடுபடாமல் வெறுமனே 'ராணுவக் குழுக்களாக' இருக்கிறார்கள்.

இவர்கள் ஒன்றில் உதிரிகளாகச் சிதைந்து போதல் அல்லது பலம்வாய்ந்த பெரிய ஒரு இராணுவக் குழுவினால் 'விழுங்கப்படுதல்' நிகழ்கிற சாத்தியங்களே அதிகம் உள்ளன.

விடுதலைப் போராட்டப்பாதையில், சரியான வேலைத் திட்டமும், மக்களிடம் நம்பிக்கையும், மக்களிடையில் அமைப்புக்கள் ஏற்படுத்தியும் வேலைசெய்து வரும் இயக்கங்களே உறுதியாக நிலைபெறும் என்பதை காலம் உணர்த்தவே செய்யும்.

*******



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அமைப்புச் செய்திகள்

### பேச்சுவார்த்தைகள்.

தமிழீழத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இயக்கங்களிடையே சில குறைந்தபட்ச அம்சங்களிலாவது ஒற்றுமைப்பட்ட செயல்பாட்டின் அவசியத்தை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி வலியுறுத்தி வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் செய்வதற்கான செயற்பாடுகளை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி செய்து வருகிறது.

பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்களை நாம் எமது 'இலக்கு' பத்திரிகையில் வெளிப்படுத்துவோம்.

ஆயினும் ஐக்கிய முன்னணி பற்றிய EPRLF தோழர்களின் கருத்தை இங்கு குறிப்பிட வேண்டும்.

> "EPRLF, EROS, TELO, PLOT, LTTE, TULF ஆகிய ஆறுமே ஐக்கிய முன்னணிக்குள் வரமுடியும். ஏனையவை அப்படி வரமுடியாது. விரும்பினால், இவற்றிலொன்றுடன் இணைந்து கொள்ளலாம்.

ஐக்கிய முன்னணி பற்றிய இவர்கள் கருத்துக்கள் நிறையவே சந்தேகங்களைக் கிளப்புவதாயுள்ளன. ஆயினும், எமது முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம்.

### கருத்தரங்குகள்.

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் அரசியற் பிரிவுத் தோழர்கள் பலவிடங்களிலும் பரவலாகக் கருத்தரங்குகளைச் செய்து வருகின்றனர். மக்களை எமது அணியில் வென்றெடுக்கவும், மக்களது கருத்துக்களை அறிந்து கொள்ளவும் இந்தக் கருத்தரங்குகள் நிறையவே உதவி வருகின்றன.

பொதுவாக மக்களிடம் இருந்து வெளிவரும் பிரதான கேள்விகள் இரண்டு:

1. ஏன், எல்லோரும் ஒன்று சேர்ந்தால் என்ன?
2. எங்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்?

மக்கள் தம்மை போராட்டத்தின் பங்காளிகளாக்காது பார்வையாளராக வைத்திருக்கும் வரை இத்தகைய கேள்விகளே பெரும்பாலும் வரும். எனவே இத்தகைய கேள்விகள் மேலும் வேகமாக மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டுமென்பதை, அவர்களை ஸ்தாபன மயப்படுத்த வேண்டிய தேவையை எம்முன் வலியுறுத்தி நிற்கின்றன.

**********

### இரண்டு மரணதண்டனைகள்.

தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தனது இரு உறுப்பினர்களுக்கு அவர்களது சமூகவிரோதச் செயல்களுக்காக வலந்தலை, காரைநகரில் மரணதண்டனை வழங்கியதாகத் துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. இவ்விருவரும் காரைநகரைச் சேர்ந்தவர்கள்; மரணதண்டனை வழங்கப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னரே இவர்களும் இராணுவப் பயிற்சி பெற்றுவிட்டுத் திரும்பியிருந்தார்கள் என்று பேசிக்கொள்ளப்படுகிறது. காரைநகரில் விபசார விடுதி நடத்திவந்ததாகக் கூறப்படும் இந்தமதி கொலை உட்பட மேலும் பல கொள்ளை, குற்றச் செயல்கள் புரிந்துள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

************

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 'ஜெகன்' கொலை

தமிழீழ விடுதலைத் தீவிரவாதிகள் என அழைக்கப்படும் குழுவின் தலைவர் என அறியப்படும் ஜெகதீசன் (ஜெகன்) 09.09.84 அன்று வட்டுக்கோட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதுபற்றி த.வி.புலிகள் விடுத்த துண்டுப்பிரசுரத்தில், "ஜெகன் என்னும் விடுதலைப் போராளி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய எதிர்பாராத நிலை எமக்கு ஏற்பட்டது" என்றும் 'ஜெகன் இயக்கத்தினரும் எமது இயக்கத் தோழர்களும் ஒருவரை ஒருவர் இனங்கண்டு கொள்ளாத நிலையில் <u>ஏற்பட்ட சம்பவத்தில்</u> நாம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜெகன் மரணமானார்.' என்று தெரிவித்துள்ளார்கள். ஆனால் ஜெகன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்த நிலை எவ்வாறு ஏற்பட்டது என்றோ, அல்லது 'ஒருவரை ஒருவர் இனங்கண்டுகொள்ளாத நிலை ஏற்பட்ட [illegible] சம்பவம்' எதுவென்றோ த.வி.புலிகள் எதுவுமே தெரிவிக்கவில்லை. இது சந்தேகம் தருவதாக உள்ளது. மக்களுக்கு உண்மை நிலையையும், நிகழ்ச்சிகளையும் தெளிவாகவும், மயக்கம் தராததாகவும் தெரிவிக்க இயக்கங்கள் முன்வரவேண்டும்.

## மஹேமாஸ்டர்

.....அன்று மஹேமாஸ்ரர் என்று அழைக்கப்படும் பஞ்சலிங்கம் இனம் தெரியாத நபர்களினால் தம்பசிட்டியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். இவர் தமிழீழ விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இயங்கிய ஒரு விடுதலைப் போராளியாவார். எத்தகைய காரணங்களுக்காகவும் இவரது கொலை நியாயப்படுத்த முடியாது என்ற காரணத்தால் கொலையாளிகள் தம்மை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. இத்தகைய கயமைத்தனமான செயல்களில் ஈடுபட்டவர்கள், அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அதை உரிமைகோராமல் விடுவது என்பது விடுதலைக்கும், விடுதலை இயக்கங்களுக்கும் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

## 'அன்னையர் முன்னணி'

அண்மையில் வல்வெட்டித்துறைப் பகுதியில் கைது செய்யப்பட்டு பூசா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமது பிள்ளைகளை விடுவிக்கக் கோரி 'அன்னையர் முன்னணி' என்ற அமைப்பின் சார்பில் தாமாகவே முன்நின்று ஊர்வலம் நடத்தியதை அறிவீர்கள். இத்தகைய ஊர்வலங்கள் மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கெதிரான எல்லா போராட்டங்களும் வரவேற்கப்படவேண்டியவையே. இத்தகைய போராட்டங்களுக்கூடாகவே மக்களை அரசியல் எழுச்சிக்குள்ளாக்கவும் போராட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். மக்களை அரசியல் எழுச்சிக்குத் தயார் செய்யாத வரை மக்கள் போராட்டம் என்பதை 'வெற்றிகரமாக' முன்னெடுப்பது சாத்தியமில்லை.

இந்த ஊர்வலத்தில் த.வி.கூ. தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்ததும் பின்னர் 'அன்னையர் முன்னணி' மறுத்து அறிக்கை விட்டதும் தெரிந்ததே. பத்திரிகை ஆசிரியர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்துக் கொண்டு தாமும் தமது கட்சியும், தொடர்ந்து <u>இயங்கி</u> வருவதாக அடிக்கடி <u>செய்திகளை</u> வெளியிடுவதே கூட்டணியின் இன்றைய பிரதான நடவடிக்கையாகும். இங்கு சிவசிதம்பரம் கலந்துகொண்டதாகத்தான் செய்தி வந்தது..ஆனால், தமிழ் நாட்டிலோ THE HINDU பத்திரிகையில் கூட்டணியே இவ்வூர்வலத்தை நடத்தியதாக முன்பக்க செய்தி வெளியிட்டிருந்தது.

## புரட்சி பத்திரிகை

புரட்சி வெளியீட்டுக் குழுவினர் 'புரட்சி' என்ற பெயரில் ரோனியோ செய்யப்பட்ட பத்திரிகை ஒன்றை வெளியிட்டு வருகின்றார்கள். இன்று தோன்றியுள்ள அரசியல்சூழ்நிலையில் இப்படியான அரசியல் பத்திரிகைகள் வெளிவருவது வரவேற்புக்குரியதே. இந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்திரிகையின் மூன்றாவது இதழில் "சேகுவாராயிசமும் இளைஞர் இயக்கங்களும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. எமது அரசியல் அறிக்கையிலிருந்தே இக்கட்டுரை எடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இத்தகைய சரியான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரவலாக்குவதை புரட்சி வெளியீட்டுக் குழுவினர் எடுக்கும்முயற்சியை பாராட்டுகிறோம். அதேவேளையில் கட்டுரைகளை அல்லது ஆக்கங்களை மறு பிரசுரம் செய்யும்போது அவை எங்கிருந்து எடுக்கப்பட்டன என்று குறிப்பிடுவது பத்திரிகா தர்மமாகும். அதற்காக மட்டுமல்லாது சரியான கருத்துக்களின் ஊற்று மூலம் எங்கே என்பதை மக்கள் இனங்கண்டு கொள்ளவும் இது வசதியாக இருக்கும்.

## கிளிநொச்சியில்,

அண்மையில் கிளிநொச்சிப்பிரதேசத்தில் இயக்கநிதி சேகரிப்பில் ஈடுபட்ட ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் நடந்துகொண்டமுறை பற்றிமக்கள் மிகவும் வேதனையுடன் நினைவுகூர்கின்றனர்.

ஒருவர் கடைகளில் சென்று பணம் கேட்டபோது 'முதலாளி' பணம் இல்லை என்று சொல்லவே, தமது கைத்துப்பாக்கியையும் றிசீற் புத்தகத்தையும் மேசையில் தூக்கி வைத்தார்களாம். 'முதலாளி' எப்படியோ பணத்தினைக் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தாராம்.

துப்பாக்கியைக் காட்டி நிதி சேகரித்தல் விடுதலை இயக்கங்கள் பற்றி சந்தேகத்தையே மக்கள் மத்தியில் உருவாக்கும்.

## வங்கிக் கொள்ளை முயற்சிகள்?

யாழ்ப்பாணம் மருத்துவ மனை வீதியில் அமைந்திருக்கும் பிரதான இலங்கை வங்கியில்,07.08.1984 செவ்வாய் இரவு 10.00 மணியளவில் லொறியிலும் மினிபஸ்ஸிலும் வந்த ஆயுதம் தரித்த இளைஞர்கள் மேற்கொண்ட கொள்ளை முயற்சியில், வங்கி பெருமளவு சேதமாகியது. இரும்புப் பெட்டிகள் மீது குண்டு வீசப்பட்டது. 10.08.84 அன்று கன்னாதிட்டி மக்கள்வங்கிக்கிளைக்கு குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

இந்த நடவடிக்கையின் எதிரொலி பின்னணியில் எந்த இயக்கம் அல்லது இயக்கங்கள் இருந்தனவென்பது சரியாகத் தெரியாத போதும் இந்த நடவடிக்கையால் என்ன பலன் விளைந்துள்ளது என்ற கேள்வி எழுதல் நியாயமே.. 'குண்டு வீச்சுப்பயில் புலமாக' வங்கிகள் அமைந்திருக்கின்றனவோ என்னவோ.." வெடி மருந்தை வீணாக்கச் செலவழிக்க வேண்டாம்!' என்ற புகழ்பெற்ற வசனத்தை நாம் இப்போது நினைவு கூரலாம்.

## சேந்தான்குளத்தில் வெடிகுண்டு.

சித்திமலையிலிருந்து மாதகலுக்குச் செல்லும்கடற்கரையோர வீதியில் உள்ள இச்சிறிய மீனவர் குடியிருப்பு அடிக்கடி இராணுவத்தினரது தாக்குதலுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாவதாகும். சில நாட்களுக்கு முன்பு இப்பகுதி மக்கள் இடத்தைவிட்டு வெளியேறினர்கள். இராணுவ வாகனங்கள் மீது தாக்குதல் செய்யப் போவதாகவும் மக்களை இடம் பெயரும்படியும் இளைஞர்கள் கூறினார்கள். என அவ்விடத்து மக்கள் தெரிவித்தனர். ஆயினும் இவை எக்காரணம் கருதியோ வெடிக்கப்படல்லை

## தமிழ் மாணவர் போராட்டம்

நடேஸ்வரா கல்லூரியிலும் யாழ் இந்துக் கல்லூரியிலும் மாணவர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்து,பாடசாலை மாணவர்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதாக முடிவு செய்திருந்தார்கள். மாணவர்கள் சுயமாக அரசினதும் இராணுவத்தினதும் காடைத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்களை எதிர்த்துப் போராட்டம் செய்திருந்த இந்த முடிவு வரவேற்று வழிநடத்தப்படவேண்டியதே. ஆனால் தமிழீழ விடுதலைக் கழகம் தேசிய மாணவர் அமைப்பினூடாக வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலும் சுவரொட்டியினூடாகவும் 10.08.84 தொடக்கம் 14.08.84 வரை பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கு அறைகூவல் விட்டிருந்தது. இது தமிழ் மாணவர்களை போராட்டத்தைக் குழப்பியதுடன் மாணவர்கள் மத்தியிலும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

மாணவர் அமைப்பின் மேற்படி துண்டுப்பிரசுரத்தில் இப்படி ஒரு கோஷம் முன்வைக்கப்பட்டிருந்தது.

: இன்று அமைதியான பகிஷ்கரிப்பு! நாளை
ஆயுதமேந்திய படையெடுப்பு:

இத்தகைய கோஷங்கள் மாணவர்களின் போராட்டங்களை முன்னெடுக்கவிடாததுடன் அவர்களை ஆபத்தான சூழலுக்கும் தள்ளிவிடக்கூடியது.

மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் மக்களை அரசியல் மயப்படுத்தும் நோக்கில், அவர்களை போராட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு பதில், வீடுகளில் அடைந்து கிடக்கவே வழிகாட்டுகிறார்கள். மக்களை வீடுகளில் அடைந்து கிடக்கச் செய்யும் அர்த்தமற்ற ஹர்த்தால்களால் எதுவித பிரயோசனமும் இல்லை. எல்லா அறைகூவல்களும், மக்களை அணிதிரட்டவும் அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தவும் செய்யவேண்டுமே ஒழிய வீட்டில் அடைந்து கிடக்கவல்ல.

இன்றைய ஹர்த்தால்கள் நடைமுறையில் மக்களை மக்கள் போராட்டத்திற்குத் தயார் செய்வதற்குப் பதிலாக, அவர்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி பார்வையாளர்களாக்கவே பயன்படுகின்றன.

நாம் நடைமுறையில் இருந்து கற்றுக்கொள்வோம்.

பாடசாலை பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் வேறு சில போஸ்டர்களின் கோரிக்கையின் பின் நீடிக்கிறது. நீள்கிறது. இந்த அர்த்தமற்ற நீடிப்பை நிராகரித்து, மாணவர்கள் உண்மையாக தம்மீதான ஒடுக்குமுறைக்கெதிராக போராட்டத்தில் குதிக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

ஜூலை மாதத்தில் ஒருநாள், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு வந்த E.PRLF தோழர்கள் மாணவர்களுடன் கூட்டம் ஒன்றை நடாத்தினார்கள். அதில் மாணவர்களுடன் அவர்கள் எவ்வெவ் அமைப்புகளை ஆதரிக்கிறார்கள் எனக் கேட்கப்பட்டது. அத்துடன் தாங்கள் வெகு விரைவில் தாக்குதல் நடத்தப்போவதால் தங்களுடன் வந்து சேர விரும்புகிறவர்களின் பெயர்களைப் பதிவுசெய்யுமாறும் கேட்கப்பட்டது.

## ஒரு குண்டுப் பார்சலின் கதை

17.08.84 வெள்ளி இரவு ராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மண்டைதீவுச் சந்தியில் மின்கம்பங்களில் இருந்து நிலத்திற்கு இறங்கிவந்த வயர்களையும் குண்டுப்பார்சல் ஒன்றையும் அதிர்ஷ்டவசமாக அவர்கள் அவதானித்து விட்டார்கள். தொலைவிலிருந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து குண்டுகளை வெடிக்க வைக்க முயன்றனர். வெடிக்கவில்லை. நெருங்கிச் சென்று பார்த்தால் அவை வெறுமனே பனங்காய்கள் என்று தெரிய வந்தது. பின்னர் ராணுவத்தினர் மண்டைதீவுக் கிராமத்தைச் சூழத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மரணங்கள் எதுவும் இல்லை.

## இலங்கை ஸ்பார்ட்டிஸிஸ்ட் தோழர் மீது CID தாக்குதல்

சர்வதேச ஸ்பார்ட்டஸிஸ்ட் சங்கம் (IST) எனும் ட்ரொட்ஸ்கிய அமைப்பு நியூயார்க், லண்டன், ஜேர்மனி, கனடா, அவுஸ்திரேலியா முதலிய இடங்களில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் கண்டனக் கூட்டங்களையும் 1979 இலிருந்து நடாத்தி வருகின்றது. இதனது இலங்கைக் கிளையில் உறுப்பினரான வின்சென்ட் தோமஸ் என்பவரை ஸ்ரீலங்கா பொலிஸார் 4 ஆம் மாடிக்கட்டிடத்திற்கு இழுத்துச் சென்று அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். 'ஈழம்' ஆதரவாளரான சிங்களவரையும் சுட்டுத் தள்ளுவோம் என்று அவருக்கு எச்சரிக்கை தரப்பட்டுள்ளது. இனவெறி ஸ்ரீலங்கா அரசு இடதுசாரிகளையும் கண்மூடித்தனமாகக் கொலை செய்யப் போவது எதிர்காலத்தில் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெயவர்த்தன தனது அமெரிக்கப் பயணத்தின் போது அமெரிக்கக் கொங்கிரசின், பாதுகாப்புக் குழுத் தலைவரான ஜோசப் அடாபேர்வுடனான பேச்சுவார்த்தைகளில் பெரிய கடற்படைக் கப்பல்களைத் தந்துதவும்படி கேட்டுள்ளான். இக் குழு அமெரிக்க ஜனாதிபதி காட்டுமிராண்டி றீகனுக்கு, இலங்கைக்கென

1. பெரிய கடற்படைக் கப்பல்களும்,
2. 35,000 டொலர் உதவியும் வழங்கப்படவேண்டுமெனச் சிபார்சுசெய்துள்ளது.

அண்மையில் புங்கங்குளம் புகையிரத நிலையத்தில் புகைவண்டியைத் தரிக்கச் செய்து புகைவண்டியிலிருந்து ஏராளமான வெடிமருந்துகள், துப்பாக்கிகள், இன்னும் பிற இராணுவ உபகரணங்கள்போன்றவற்றை இராணுவத்தினர் பலாலி முகாமுக்குள் கொண்டு போய்ச் சேர்த்துள்ளனர்.

---

தனிநபர் அழிப்பும் தமிழீழ விடுதலை இயக்கமும்

---

அண்மையில் தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) இருந்து பிரிந்த சிலரும் வேறுசிலரும் சேர்ந்து தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் (TERPLA) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல், 15,000,00 ரூபா பெறுமதியான அரச உடமைகளை தேசப்படுத்தியது ஆகிய நடவடிக்கைகளை தாமே மேற்கொண்டதாக துண்டுப்பிரசுரம் மூலம் உரிமைகோரி இருந்தனர். இராணுவ நடவடிக்கையிலேயே அதிகம் அக்கறை கொண்டவர்களாகவே இவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

சந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் வைத்து இத்தோழர்கள் தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள். இச் சம்பவத்தில் கைக்குண்டுகள் வீச்சு, துப்பாக்கிச் சூடு என்பனவும் இடம்பெற்றுள்ளன. இரகசியமாக கிடைத்த தகவல்களின்படி TELO வைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டதாக அறியமுடிகிறது.

மேல்நாடு ஒன்றிலிருந்து வெளிவரும் தமிழீழ விடுதலை சார்பான 'எண்ணம்' சஞ்சிகைக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) தலைவர் ஸ்ரீசபாரத்தினம் அளித்த பேட்டியில் தனிநபர் அழிப்பு பற்றிய கேள்விக்கு அளித்த பதிலை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமானது.

"தனிநபர்கள் கருத்துக்களை பிரதிபலிக்கிறார்கள். தனிநபர்களை அழிப்பதன் மூலம் கருத்துக்களை அழித்துவிட முடியாது. எனவே தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தனிநபர் அழிப்பை எதிர்க்கிறது."

கருத்துக்கள் அழகாகத்தான் இருக்கின்றன. ஆனால் நடைமுறைதான் மோசமாக முரண்பட்டுப் போகிறதே. இது எதிரிக்குத்தான் சாதகமாக அமையும். கடந்தகால சம்பவங்களில் இருந்து நாம் இன்னமும் கற்றுக் கொள்ளாமலே இருக்கின்றோம். இனியும் தவறுவோமாயின் / தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்தும் தமிழ் மக்களிடமிருந்தும் அந்நியப் பட்டுப் போவது தவிர்க்க இயலாதது.

---

சென்றல்காம்ப் பொலிஸ் நிலைய தாக்குதல்; இயக்கங்களின் குளறுபடி

---

சில மாதங்களுக்கு முன்பு அம்பாறை சென்றல் காம்ப் பொலிஸ் நிலையம் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் அதற்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) உரிமை கொண்டாடியதும் அனைவரும் அறிந்ததே. ஆனால் அதிர்ச்சியான தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை என்ற அமைப்பு தாங்கள் தான் அத்தாக்குதலை செய்ததாக உரிமை கோரியுள்ளனர். அதேவேளையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாணவர் அமைப்பு தமிழகத்தில் வெளியிடும் 'தமிழமுது' என்ற சஞ்சிகையில் ஒரே ஒரு வரியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) தாம் அத்தாக்குதலைச் செய்யவில்லையென அறிவித்துள்ளனர்.

சுவரொட்டி மூலமும் துண்டுப் பிரசுரம் மூலமும் தாங்களே அத்தாக்குதலை மேற்கொண்டதாக உரிமை பாராட்டிவிட்டு தமிழீழத்தில் பரவலாக மக்களிடம் கிடைக்காத சஞ்சிகை ஒன்றில் ஒரேஒரு வரியில் தாங்கள் அத்தாக்குதலை மேற்கொள்ளவில்லையென்று எழுதுவது அவ்வியக்கம் பற்றி மக்களிடம் சந்தேகங்களை எழுப்பச்செய்யும். இதற்கு முன்னரும் மூன்றுபேரை சமூக விரோதிகளாகக் கணித்து தாங்களே மரணதண்டனை விதித்ததாக துண்டுப்பிரசுரம் மூலம் உரிமை பாராட்டிய பின்னர் "தமிழீழத்தின் குரல்" வானொலியில் தாங்கள் பொறுப்பல்ல என்று அறிவித்ததும் அதுபற்றி மக்கள் கேள்வி எழுப்பியதும் ஓயமுன்னர் இப்படியான இன்னுமொரு நடவடிக்கை எத்தகைய பாதிப்பை கொண்டுவரும் என்பது நீண்டகாலத்தில் தெரிய வரும்.

முன்னணிச் செய்தி முன்னணிச் செய்தி முன்னணிச் செய்தி முன்னணிச் செய்தி முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாங்கள் தான் பொறுப்பு என்று சொந்தம் பாராட்டி பிரச்சாரம் செய்யும் அளவுக்கு சமூக மட்டப் பிரச்சாரம் செய்வது தான் நியாயமானதும் மக்களிடம் தெளிவைக் கொடுப்பதாகவும் இருக்கும். இல்லையேல் மட்டக்களப்பு சிறையுடைப்புப் போல குழப்பம் மிக்கதாக இருப்பதை தவிர்க்க முடியாது.

இன்னுமொரு விடயத்தையும் கவனத்திலெடுக்க வேண்டியுள்ளது. இராணுவக் கவர்ச்சி மூலம் அமைப்பைக் கட்டுவதென்பது அரசியல் ரீதியாக நல்ல பலன்களை தரமாட்டாது. தவிர்க்க முடியாத தீவிரவாத சுத்த இராணுவக் கண்ணோட்டத்தை அமைப்பு முழுவதும் பரவலாக்குவதையே இவை செய்யும்.

## இராணுவ வீரர் தப்பியோட்டம்

வல்வெட்டித்துறை இராணுவ முகாம் மீது விடுதலை இயக்கமொன்று தாக்குதலை மேற்கொண்டது. இதனை அடுத்து அம்முகாமிலிருந்து பத்து இராணுவ வீரர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

பருத்தித்துறை திக்கத்தில் அதிரடிப்படை மீதான தாக்குதலின் போது காயமடைந்த அதிரடிப்படை வீரர் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு தாதி ஒருவரிடம் தமது முகவரியைக் கொடுத்து தனது நிலையை குடும்பத்தினருக்கு அறிவிக்கும்படி சொன்ன அவர் தாங்கள் மரணமடைந்தால்கூட தங்களது குடும்பத்தினருக்கு அறிவிக்கப்படுவதில்லை என்றும் சொல்லியுள்ளார்.

கீரிமலையிலுள்ள ஒரு தண்ணீர் கிணற்றை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் காவல் காத்து வருகின்றனர். அங்கு காவலில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் சிவில் உடையில் அங்கிருந்து வெளியேறியுள்ளார். அருகிலிருந்த ஒரு கிராம மக்களிடம் சென்று தனது குடும்ப நிலையைக் கூறி தான் ஊர்செல்வதற்கு தனது மணிக்கூட்டை வைத்துக் கொண்டு பணம் தரும்படியும் கேட்டுள்ளார்.

இவை எமக்கு எதை உணர்த்தி நிற்கின்றன? தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்குவதற்கும் முயற்சிக்கு முதலில் பலியாவது ஸ்ரீலங்கா மக்களே. கூலிப்படையிலுள்ள சிங்கள மக்களின் இதற்கெதிரான போக்கின் வெளிப்பாடாகவே இத்தப்பியோட்டம் அமைகிறது. இனிமேலும் இது வளர்ந்து செல்லவே செய்யும். அரசு தனது இலாபங்களுக்காகத் தமிழ் மக்களினை அடக்குவதற்கு சிங்கள மக்கள் தம்மை அற்ப கூலிக்காகப் பலியிடத் தயாராக இல்லை..என்பது வருங்காலத்தே தெளிவாக உணர்த்தப்படும்.

*********

தமிழீழ மக்களே!

எமது இந்த முதலாவது இதழ் மிகுந்த காலதாமதத்துடனே உங்களிடம் வந்து சேர்கிறது. இனிமேலும் இத்தகைய காலதாமதம் ஏற்படாது என்று உறுதி கூறுகின்றோம்.

மிகுந்த நெருக்கடிகளுக்குள்ளும் பொருளாதார இடர்பாடுகளுக்கும் உங்கள் கைகளில் 'முன்னணிச் செய்தி' தவழ்கிறது. இது தமிழீழ மக்களாகிய உங்களின் சொத்து. தொடர்ந்து வெளிவரவும் பரவலாகக் கிடைக்கவும் செய்வது உங்களின் கடமை.

எங்கே போராட்டம் இருக்கிறதோ, அங்கே தியாகமும் உண்டு. மரணம் என்பது அடிக்கடி நிகழ்வது. ஆனால், நாம் மக்களின் நலன்களையும், ஏகப்பெரும்பான்மையினரின் இன்ப துயரங்களையும் மனதில் கொண்டு மக்களுக்காக உயிர் விட்டால், அது தகுதியான சாவாகும். இருந்தாலும், அவசியமான தியாகங்களைத் தவிர்க்க நாம் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.

---------- மாவோ ------

*************
**********



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்